4 மாத நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றி



சென்னை, அக். 9: தவெக அரசின் 4 மாத நல்லாட்சிக்கு கிடைத்த வெற்றி இது என்று சட்டத் துறை அமைச்சர் சி.டி.ஆர்.நிர்மல் குமார் தெரிவித் தார்.

தாராபுரம், மது ராந்தகம் பேர வைத் தொகுதி இடைத்தேர்தல் வெற்றி குறித்து சென்னை தலைமைச் செயலகத் தில் அவர் செய்தியாளர்களிடம் கூறிய தாவது:

மதுராந்தகம், தாராபுரம் இடைத் தேர்தலில் தவெக பெற்றுள்ள வெற்றி, தமிழக முதல்வர் விஜய்யின் 4 மாத கால சிறப்பான நல்லாட்சிக்கும், மக் கள் விரும்பிய மாற்றத்துக்கும் கிடைத்த அங்கீகாரமாகும். எவ்வித பண பலமும் இன்றி, நேர்மையான முறையில் தேர்த லைச் சந்தித்து இந்த வெற்றியை தவெக பெற்றுள்ளது.

அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமியின் சுயநல அரசியல் காரண மாகதான் அந்தக் கட்சி 3-ஆவது இடத் துக்கு வீழ்ச்சி அடைந்துள்ளது.

அதிமுகவை ஒரு 'லெட்டர் பேட் கம் பெனி' போல எடப்பாடி பழனிசாமி நடத்தி வருகிறார்.

அவரது செயல்பாடுகள் பிடிக்காத தாலும், திமுகவுடனான அவரது ரகசிய உறவு காரணமாகவும்தான் அந்தக் கட்சி யின் மூத்த தலைவர்களும், எம்எல்ஏ-க் களும் விலகுகின்றனர். தமிழ்நாட்டில் அத்தியாவசிய பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த முதல்வர் விஜய் ஆலோசனை நடத்தி வருகிறார். விரைவில் முடிவுகள் அறிவிக்கப்படும் என்றார்.

பொய் பிம்ப அரசியல் வீழ்ச்சி தொடக்கம்

மு.க.ஸ்டாலின் விமர்சனம்



சென்னை, அக். 9: இடைத்தேர்தலில் பொய் பிம்ப அரசியல் வீழ்ச்சி தொடங் கி விட் ட து என்று திமுக தலைவர் மு.க.ஸ்டாலின் விமர்சனம் செய்துள்ளார்.

இது தொடர்பாக அவர்வெள்ளிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

அதிகார பலம், ஆட்சி பலம், பணபலம், காவல்துறை பலம் ஆகியவற்றைப் பக்கபலமாக வைத்து தவெக இந்தத் தேர்தலை எதிர்கொண்டது. சினிமா கவர்ச்சி பலத்தை மட்டுமே நம்பி அரசியல் களத்தில் குதித்து, பெரும்பான்மை பலம் இல்லாவிட்டாலும் குதிரை பேரங்கள் மூலமாக முதல்வராகி யுள்ள விஜய், இந்த இடைத் தேர்தலி லும் 'ரீல்ஸ்' காட்சிகளே கைகொடுக் கும் என்று நம்பினார்.

வெளியூரில் இருந்து இறக்கி விடப் பட்ட ஆட்கள், அவர் போகும் சாலைகள் அனைத்தும் வைக்கப் பட்ட 'பேரிகேட்', கொடுக்கப்பட்ட அன்பளிப்புகள், அமைச்சர்களுக்கு மட்டும் எவ்வளவு செலவு செய்துள் ளேன் என்று ஆளுங்கட்சி வேட்பா ளரே அளித்த வாக்குமூலங்கள் இவை அனைத்தையும் வைத்துப் பார்க்கும் போது இந்த வெற்றியை அடைய தவெக எவ்வளவு பதற்றத்தில் இருந் துள்ளது என்பதை அறிய முடிகிறது. கட்சி, தேர்தல், மக்கள் பணிகள் என் றால் என்னவென்று முதல்வர் விஜய் இனியாவது உணர்ந்து செயல்பட வேண்டும்.

துரோகத்துக்கு இடைக்கால வெற்றி: தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட பிறகு தான் மகளிருக்குகட்டணமில்லாப் பயண விரிவாக்கம், தாய் மாமன் தங்கமோதிரம், அண்ணன் சீர் போன்ற திட்டங் களை அவர் அறிவித்தார். இதுவே தேர்தல் நடத்தை விதிகளை மீறியதுதான். இப் படி பல்வேறு விதிமீறல்க ளைச் செய்தே இந்த முடிவை தவெக பெற்றுள்ளது.

என்னைப் பொருத்தவரை யில் துரோகத்துக்கு இடைக்கால வெற்றி கிடைத்துள்ளது. அதே நேரத் தில் பொய் பிம்ப அரசியலின் வீழ்ச்சி தொடங்கிவிட்டது. திரைமறைவில், இன்னும் சில கட்சிகளின் வாக்கு களை வாங்க பொய்ச் செய்தியை பரப் பினார்கள்.

ஓட்டுமொத்த அமைச்சரவையும் இரு தொகுதிகளுக்குள் மூன்று வார காலம் முடங்கியது. துரோகம் செய்த வேட்பாளர்களுக்கு எதிர்ப்பு தெரி வித்த மக்கள் காவல்துறையினரைக் கொண்டு மிரட்டப்பட்டார்கள்.

என்ன செய்தும், திமுக மீதான மக் களின் நம்பிக்கையை எதுவும் செய்ய முடியவில்லை. திமுகவை மட்டுமே குறிவைத்துப் பேசினார் முதல்வர். ஆனால், திமுகவின் செல்வாக்கை அவரால் அசைக்க முடியவில்லை.

பெரும்பான்மை மக்களால் நிரா கரிப்பு: துரோக சக்தியான தவெக வுக்கு எதிராகக் களம் கண்ட அனைத் துக் கட்சிகள் பெற்ற வாக்குகளும் ஆட்சிக்கு எதிரான வாக்குகள் என் பதுதான்! அவைதான் பெரும் பான்மை! இந்த அரசு மீண்டும் பெரும்பான்மை மக்களால் நிராகரிக் கப்பட்டுள்ளது என ஸ்டாலின் தெரி வித்துள்ளார்.

கூடுதல் உத்வேகத்துடன் அதிமுக செயல்படும்



சென்னை, அக். 9: 'மதுராந்தகம், தாராபுரம் இடைத் தேர் தல் கள் வெற்றியால் அதிமு கவை அழிக்கலாம் என யாரும் கனவு காண வேண்டாம்; தமிழர் நல னுக்காக கூடுதல் உத் வேகத்துடன் அதிமுக செயல்படும்' என்று அக் கட்சியின் பொதுச் செயலர் எடப்பாடி கே.பழனிசாமி தெரி வித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளிக்கி ழமை வெளியிட்ட அறிக்கை:

தமிழகத்தில் பெரும்பான் மையின்றி ஆட்சியமைத்துள்ள தவெக அரசு பெரும்பான்மை யுடன் விளங்க வேண்டும் என் பதற்காக அதிமுக சட்டப்பே ரவை உறுப்பினர்களிடம் குதிரை பேரம் நடத்தியதால் இடைத்தேர் தல் நடைபெற்றுள்ளது. கடந்த பொதுத் தேர்தலில் அதிமுக கூட்டணியில் இருந்த கட்சிகள் சில இடைத்தேர்தலில் இடம்பெ றவில்லை. ஆனால் ஆளும் கட்சி யான தவெக பல கட்சிகளுடன் கூட்டணி அமைத்து தேர்தலில் நின்றது. பண பலம், ஆள் பலத் துடன் அமைச்சர்களை தேர்தல் பணியில் ஈடுபடுத்தியது. அதே நேரம் அதிமுகவுக்கு துரோகம் இழைக்கும் வகையில் சிலர் முது கில் குத்துவது போல எதிர்த்து நின்றனர்.

இடைத்தேர்தலில் தோல்வி உறுதி என அறிந்த தவெக, பல ஆசை வார்த்தைகளை கூறியும், பொய் வாக்குறுதிகளை அளித் தும், அதிமுகமாவட்டச்செயலர் உள்ளிட்டோர் மீது பொய் வழக் குப் பதிந்து மிரட்டி யும் தேர்தலில் வென் றுள்ளது. தெருத்தெ ருவாக அலைந்து பிர சாரம் மேற்கொள் ளும் கட்டாயம் முதல் வருக்கு ஏற்பட்டது. இது அதிகார பலத் துக்கும், பணநாய கத்துக்கும் கிடைத்த வெற்றியாகும்.

'அதிமுகவை அழிக்க கனவு காண வேண்டாம்': இடைத்தேர் தல்கள் ஆளும் கட்சிக்கு சாதக மாக அமையும் என்பதை கடந்த அதிமுக ஆட்சியின் போது நடைபெற்ற விக்கிரவாண்டி, நாங்குனேரி இடைத் தேர்தல்க ளில் அதிமுக வெற்றியை வைத்து அறியலாம். எனவே, இது தவெ கவுக்கு கிடைத்த இடைக்கால வெற்றியாகும். அதைவைத்து அதிமுகவை அழித்துவிடலாம் என யாரும் கனவு காணவேண் டாம்.

எம்ஜிஆர், ஜெயலலிதா வால் கட்டிக்காத்த இரும் புக் கோட்டைதான் அதிமுக. இடைத்தேர்தல் வெற்றியால் அதிமுக ஆட்சி அமைய வாய்ப் பில்லை என தெரிந்தும் நல்ல வாக்குகள் கிடைத்துள்ளன. எனவே, சோதனையை அதிமுக முறியடிக்கும். அதிமுக ஆலம ரம். ஆயிரம் காலத்துப் பயிர். இன்னும் எத்தனையோ தலைமு றைகளுக்கு தமிழருக்காக பாடுப டப்போகும் நல்லியக்கம். தமிழர் நலனுக்காக மேலும் உத்வேகத்து டன் அதிமுக செயல்படும் எனத் தெரிவித்துள்ளார் எடப்பாடி கே.பழனிசாமி.

எதிர்பார்ப்புடன் அலுவலகம் வந்து ஏமாற்றத்துடன் சென்ற அதிமுகவினர்

சென்னை, அக். 9: இடைத்தேர்தல் முடிவுகளையொட்டி, சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலகத்துக்கு வெள்ளிக்கிழமை காலை அதிமுக தொண்டர் கள் ஏராளமானோர் எதிர்பார்ப்புடன் வந்த நிலையில், பின்னர் ஏமாற்றத்துடன் திரும்பிச் சென்றனர்.

மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தல் வாக்கு எண்ணிக்கை வெள்ளிக்கிழமை காலை தொடங்கி நடைபெற்றது. தாராபுரம் தொகுதி யில் அதிமுக வேட்பாளர் வெற்றி பெறுவார் என அந்தக் கட்சித் தொண்டர்கள் நம்பிக்கை யுடன் இருந்தனர். முதல் 5 சுற்றுகள் வரை அந்தக் கட்சியின் வேட்பாளர் கே.பானுமதி முன்னிலை பெற்றார். அப்போது, அதிமுக தொண்டர்கள் சென்னை ராயப்பேட்டையில் உள்ள அதிமுக தலைமை அலுவலக வளாகத் தில் குவிந்தனர். முன்னாள் அமைச்சரும், அதி முக அமைப்புச் செயலர்களில் ஒருவருமான சி.பொன்னையன் உள்ளிட்டோர் அங்கு வந்தனர்.

தாராபுரம் அதிமுக வேட்பாளர் முன்னிலை எனக் கூறப்பட்டதால் உற்சாகமடைந்த அதி முக தொண்டர்கள் முன்னாள் முதல்வர்கள் எம்ஜிஆர், ஜெயலலிதா ஆகியோரை வாழ்த் தியும், தற்போதைய கட்சியின் பொதுச் செய லர் எடப்பாடி கே.பழனிசாமியை வாழ்த்தியும் முழக்கமிட்டனர்.

ஆனால், அடுத்தடுத்த சுற்றுகளில் தாராபு ரம் தொகுதி அதிமுக வேட்பாளர் பின்தங்கி யதுடன், திமுக வேட்பாளரைவிட பின்தங்கி மூன்றாமிடத்துக்குச் சென்ற தகவல் வெளியா னது. இதனால், அதிமுக தொண்டர்கள் விரக் தியடைந்து தலைமை அலுவலகத்தில் இருந்து கலைந்து சென்றனர்.

பிற்பகல் 2 மணி வரை முன்னாள் அமைச்சர் சி.பொன்னையன் உள்ளிட்டோர் அலுவலகத் தில் இருந்தனர். பின்னர் அவர்களும் புறப்பட் டுச் சென்றனர். தாராபுரம் இடைத் தேர்தலில் அதிமுக எப்படியும் வென்றுவிடும் என்ற எதிர் பார்ப்புடன் தலைமை அலுவலகத்தில் குவிந்த அக்கட்சித் தொண்டர்கள் ஏமாற்றத்துடன் சென்றனர்.

நவநீதம் பிள்ளைக்கு முதல்வர் விஜய், தலைவர்கள் வாழ்த்து

சென்னை, அக். 9: அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ள தென்னாப்பிரிக்கா வாழ் தமிழ் வம் சாவளியைச் சேர்ந்த நவநீதம் பிள் ளைக்கு முதல்வர் விஜய், திமுக தலை வர் மு.க.ஸ்டாலின் உள்ளிட்ட அர சியல் தலைவர்கள் வாழ்த்து தெரி வித்துள்ளனர்.

முதல்வர் விஜய்: சர்வதேச அள வில் மனித உரிமைகளுக்காகவும், உலக அமைதிக்காகவும், நீதிக்காக வும் அயராது குரல் கொடுத்துவரும் நவநீதம் பிள்ளைக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ள தற்கு வாழ்த்துகள். ஒடுக்கப்பட்ட மக்களுக்கா கவும், குரலற்றவர்களின் உரிமைக ளுக்காகவும் தமது வாழ்நாளையே அர்ப்பணித்த அவரது நெடிய பய ணத்துக்கு கிடைத்துள்ள அங்கீகா ரம் இது.

2012-ஆம் ஆண்டு ஜெனீவா வில் உள்ள ஐக்கிய நாடுகள் அவை யில் அவரைச் சந்தித்து, ஈழத்தமிழர் களின் துயர்மிகுந்த வாழ்வையும், நீதிக்காகவும் கண்ணியமான வாழ் வுக்காகவும் அவர்கள் நடத்தி வரும் போராட்டத்தையும் எடுத்துரைத் ததை இத்தருணத்தில் நெகிழ்வுடன் நினைவுகூர்கிறேன். மனித உரிமைக ளுக்காகவும் நீதிக்காகவும் அவர் ஆற் றிவரும் பணி, வருங்காலத் தலைமு றைகளுக்கும் தொடர்ந்து ஊக்கம ளிக்கட்டும்.

மாணிக்கம் தாகூர் (காங்கிரஸ்): மனித உரிமைகளுக்காகவும், உலக நீதிக்காகவும் தன் வாழ்நாளெல்லாம் சமரசமின்றிப் போராடிவரும் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்தவரும், சர்வ தேச சட்டமேதையுமான நவநீதம் பிள்ளைக்கு அமைதிக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. உல கெங்கும் வாழும் தமிழர்களுக்கும் ஒட்டுமொத்த இந்தியர்களுக்கும் இது பெருமிதம் அளிக்கிறது.

நயினார் நாகேந்திரன் (பாஜக): மனித உரிமைகளைப் பாதுகாப்பதி லும், உலக நாடுகளிடையே அமைதி யையும் நீதியையும் நிலைநாட்டுவதி லும், சர்வதேச சட்டத்தின் முக்கியத் துவத்தை வலியுறுத்துவதிலும் நவ நீதம்பிள்ளை மேற்கொண்ட அர்ப் பணிப்புமிக்க பணிகள் உலக அரங் கில் பாராட்டத்தக்கவை. அவரது சாதனை, உலகெங்கிலும் வாழும் தமிழ் மக்களுக்குப் பெருமையையும், இளைய தலைமுறையினருக்கு உத் வேகத்தையும் அளிக்கிறது.

அன்புமணி (பாமக): ஐ.நா. மனித உரிமை ஆணையத்தின் தலைவ ராக நவநீதம் பிள்ளை பணியாற்றி யபோது இலங்கை போர் குற்றங்க ளுக்கு காரணமானவர்கள் தண்டிக் கப்படவேண்டும் என்ற முயற்சியை மேற்கொண்டதை அறிவேன். பசு மைத் தாயகம் சார்பில் முன்வைக் கப்பட்ட பல கோரிக்கைகளை யும் அவர் ஏற்றுள்ளார். அவருக்கு வாழ்த்துகள்.

டிடிவி.தினகரன்(அமமுக): நீதி, சமத்துவம், மனிதநேயம் ஆகிய உய ரிய கொள்கைகளுக்காக நவநீதம் பிள்ளை ஆற்றிவரும் பொதுப்ப ணிகளும், அமைதியான உலகை உருவாக்குவதற்கான முயற்சிகளும் தொடர்ந்து சிறக்க வாழ்த்துகள்.

தமிழக ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குநராக ஏடிஜிபி பிரேம் ஆனந்த் சின்ஹா நியமனம்

சென்னை, அக். 9: தமிழக காவல் துறையின் ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குநராக ஏடிஜிபி பிரேம் ஆனந்த் சின்ஹா நியமனம் செய் யப்பட்டார்.

தமிழக காவல் துறையின் ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குந ராக இருந்த ஏ.அருண், கடந்த ஜூலை 13-ஆம் தேதி பணியிட மாற்றம் செய்யப்பட்டார். இத னால் ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குநர் பொறுப்பை கூடு தல் பணியாக அந்தத் துறையின் சிறப்புப் புலனாய்வு பிரிவு ஐஜி யாக இருக்கும் சி.மகேஸ்வரி கவ னித்து வந்தார்.

இந்த நிலையில், தாம்பரம் காவல் ஆணையராக இருந்த ஏடி ஜிபி பிரேம் ஆனந்த் சின்ஹாவை, ஊழல் தடுப்புப் பிரிவின் இயக்கு நராக நியமித்து தமிழக அரசின் உள்துறை முதன்மைச் செயலர் ஏ.கார்த்திக் வெள்ளிக்கிழமை உத்தரவிட்டார்.

மேலும், அந்த உத்தரவில், தாம்பரம் காவல் ஆணையர் பொறுப்பை கூடுதல் பணியாக சென்னை பெருநகர காவல் துறை ஆணையர் ஏ.அமல்ராஜ் கவனிப்பார் என்றும் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஊழல் தடுப்புப் பிரிவு இயக்குந ராக பிரேம் ஆனந்த் சின்ஹா, திங் கள்கிழமை பொறுப்பு ஏற்கிறார்.

பிகாரைச் சேர்ந்தவர்: பி காரை பூர்விகமாகக் கொண்ட பிரேம் ஆனந்த் சின்ஹா, ஐபிஎஸ் தேர்ச்சி பெற்று கடந்த 2001-ஆம் ஆண்டு தமிழக காவல் துறையில் இணைந்தார்.

சிவகங்கை மாவட்டம் தேவ கோட்டை உதவி காவல் கண் காணிப்பாளராக தமிழக காவல் துறையில் தனது பணியை பிரேம் ஆனந்த் சின்ஹா தொடங்கி னார். பின்னர் எஸ்.பி.யாக பதவி உயர்வு பெற்ற பிரேம் ஆனந்த் சின்ஹா, பல மாவட்டங்களில் பணியாற்றினார்.

கடந்த 2013 முதல் 2017-ஆம் ஆண்டு வரை மத்திய போதைப் பொருள் கடத்தல் தடுப்புப் பிரிவின் சென்னை மண்டல இயக்குநராக இருந்தார். இதன் பின்னர், சென்னை பெருநகர காவல் துறையின் தெற்கு கூடு தல் ஆணையர், மதுரை மாநகர காவல் ஆணையர், தென் மண் டல ஐஜி உள்ளிட்ட பல்வேறு பதவிகளை வகித்தார். ஏடிஜிபி யாக கடந்த ஜனவரி பதவி உயர்வு பெற்ற அவர், ஆவடி காவல் ஆணையராக நியமிக்கப்பட் டார். கடந்த ஜூன் மாதம் தாம்ப ரம் காவல் ஆணையராக பிரேம் ஆனந்த் சின்ஹா பணியிட மாற் றம் செய்யப்பட்டார்.

நவீனத்துக்கு முக்கியத்துவம்: தமிழக காவல் துறையை நவீன மயமாக்குவதில் பிரேம் ஆனந்த் சின்ஹாவின் பங்கு முக்கியமா னதாகக் கூறப்படுகிறது. தமிழக காவல் துறை தற்போது குற்றவா ளிகளை அடையாளம் காண பயன்படுத்தும் முக அடையாள காணும் செயலி, முக அடை யாளம் காணும் கேமராக்கள், ட்ரோன்கள் உள்ளிட்டவற்றை அறிமுகம் செய்ததில் பிரேம் ஆனந்த் சின்ஹா முக்கிய பங்காற் றினார்.

அதேபோல, கரோனா பொது முடக்க காலத்தில் இருந்த இ-பாஸ் திட்டத்தை எளிதாக்கிய திலும் பிரேம் ஆனந்த் சின்ஹா வின் பங்கு உண்டு.



உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக... www.dinamani.com

CHANGE OF NAME

I, **SUBHA VASUDEVAN,** wife of Prabhu, D.O.B : 30.05.1978, (Place of birth : Thuraiyur, Tamil-nadu), D.No. 3/89, Melaveethi, Naduvalur Post, Gangavalli Tk, Salem Dt - 636105 shall henceforth be known as **SUBHA PRABHU.**

SUBHA VASUDEVAN
07.10.2026
Gangavalli

NATIONAL SEEDS CORPORATION LIMITED(NSC)
(A GOVERNMENT OF INDIA UNDERTAKING)
22-C, SIDCO (N), INDL. Estate, Ambattur, Chennai - 600 050.
PH: 044-2625 6192, 2624 2363. Email ID - rm.chennai@indiaseeds.com

No: 4 / OS / PRODN / NSC-CHN / 2026-2027 / 7 Date: 09.10.2026

NOTICE INVITING TENDER

(I). e-Tenders are invited from the reputed Seed Producer / Supplier for Supply of Paddy, Fodder Seeds, Pulses and Oilseeds (e-tender ID - **No: 4 / OS / PRODN / NSC-CHN / 2026-2027 / 7**)

(II). Due date and time of Tender bid submission for supply is **16.10.2026 up to 14.00 Hrs.**

For detailed information log on to the website **https://indiaseeds.enivida.com** and **www.indiaseeds.com**

REGIONAL MANAGER

தமிழ்நாடு அரசு,
நாகர்கோவில் மாநகராட்சி
3வது குறுகிய கால மறு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை

ந.க.எண் 83 / 3745 / 2017 நாள்: 08.10.2026

நாகர்கோவில் மாநகராட்சியில் தூயமை இந்தியா திட்டத்தின் கீழ் (SBM 2018-19) ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (இது உறை முறை) கீழ்கண்ட விபரப்படி பணி மேற்கொள்ள மின்னணு முறையில் (E-Tendering) https://tntenders.gov.in என்ற இணையதளத்தின் மூலம் கோரப்படுகிறது

வ. எண்	மதிப்பீடு தொழிற்நுட்ப அனுமதி எண்.	வேலையின் பெயர்	மதிப்பீடு தொகை (ரிசைசத்தில்)	வைப்பு தொகை (ரிசைசத்தில்)
1	04 /26-27/ CE	நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட வலம்புரிவிளை உரக்கிடங்கில் Bio- Mining முறையில் கையாண்டு புதுதான கழிவுகளை வெளியேற்றும் பணி	420.00	4.20

முக்கியநிகழ்வுகள்

அ)	ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க தொடங்கும் நாள் மற்றும் நேரம்	09.10.2026, 11.00 முற்பகல் முதல்
ஆ)	ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்து முடிக்க நாள் மற்றும் நேரம்	04.11.2026, 11.00 முற்பகல் முதல்
இ)	ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம்	04.11.2026, 4.00 பிற்பகல் வரை

ஒப்பந்தப்புள்ளி https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யவும்

ஆணையர்
செ.ம.தொ.கி./ 3090 / ஒப்பந்தப்புள்ளி / 2026 நாகர்கோவில் மாநகராட்சி

JM Financial
JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஸன் கம்பெனி லிமிடெட் (JMFARC)
CIN: U67190MH2007PLC174287
Regd. Office: 7th Floor, Cnergy, Appasaheb Marathe Marg, Prabhadevi, Mumbai – 400025
Email id: queries.arc@jmfl.com | Contact No. 022-62241676 | Website: www.jmfinancialarc.com

அசையாச் சொத்துக்களின் விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை - IV-A பிணைய நலன் (அமலாக்க) 2002 இன் விதிகள், விதி 9(1) [விதி 8(6) காண்க],

கடனீட்டு சொத்துக்கள் சொக்கமாகவும் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 சேர்த்து வாசிக்கவும் பிணைய நலன் (அமலாக்கம்) சட்டம், 2002 இன் விதி 8 (6) மற்றும் விதி9(1) இன் கீழ் அசையாச் சொத்துகளை பின்னணு ஏலவிற்பனையின் மூலம் விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

இந்த அறிவிப்பின் மூலம் கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), இணைகடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்) மற்றும் ஜாமின்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இந்த அறிவிப்பில் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களை எக்கிட்டாஸ் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட் வங்கியின் (ஒதுக்கீடு செய்தவர்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் கவாதிம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் (தொடர்கின்றன JMFARC-விற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டது) **EB Retail 2025 - Trust / EB Retail December 2025 - Trust** ("பிணையக் கடன் வழங்கியவர்") இன் நம்பகத்திற்குரியவர், JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஸன் கம்பெனி லிமிடெட் (JMFARC), அவர்களால், "எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் "என்ன இருக்கிறதோ அதே நிலையில்" என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்), அடமானதாரர்(கள்), ஜாமின்தாரர்(கள்) நிர்ணய விலை, பே வணிழ தொகை, ஏல உயர்வு தொகை, மின்-ஏல தேதி மற்றும் நேரம் ஆகிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன

வ எண்	கடன்தாரர்/ அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்கள் பெயர் & முகவரி	அசையா சொத்துக்களின் விவரங்கள்	நிர்ணய விலை, பேவணித் தொகை, ஏல உயர்வுத் தொகை	கடன் / சொத்து நிறுவனத் தொகை
1.	**கடன்தாரர்** 1. திரு கண்ணன் M, C/o திரு/திருமதி மது கதவு எண் 14/8, சந்திரன் காரடன், சின்னதிருப்பதி, சேலம், தமிழ்நாடு, 636008 **இணை கடன்தாரர்** 2. திருமதி அம்சவல்லி K, C/o திரு ராமமூர்த்தி கதவு எண் 159, காந்தி நகர், சின்னதிருப்பதி, சேலம், தமிழ்நாடு, 636008 3. திருமதி காசிமணி P, C/o திரு மாரிமுத்து, 4.திருமதி மது K, C/o திரு கருப்பன், 5. திரு பிரபு M, C/o திருமதி மது, 6. திருமதி சரோஜா M, C/o திருமதி மது **எண் 3 முதல் 6 வரை** கதவு எண் 193, புது காலனி, செங்கல் ஆனை சாலை, பொன்னம்மாபேட்டை, சேலம், பதுமாரியம்மன் கோயில், சேலம், தமிழ்நாடு, 636003	அரிஜனா நத்தம் சர்வே எண் 144/1, T. சர்வே எண் 99 ஆகியவற்றை உள்ளடக்கிய, 952 1/2 சதுர அடி பரப்பளவு கொண்ட நிலப்பகுதி மற்றும் கட்டிடம், வழித்தட உரிமைகள் அனைத்தும் உள்ளடங்கிய அந்த நிலமானது, சேலம் பதிவு மாவட்டம், சேலம் கிழக்கு பதிவு மாவட்டம், சேலம் தாலுகா, சேலம் கிழக்கு எண் 1 துணைப் பதிவு மாவட்டம், வார்டு ஏகே, கிராமம், பிளாக் 15 ஆகிய இடங்களில் பின்வரும் நான்கு எல்லைகளுக்குள் அமைந் துள்ளது: (வடக்கில்)- T.சர்வே எண் 97 சேலம் மாநகராட்சி பொதுக் கிணறு (தெற்கில்)- T.சர்வே எண் 63 மணி மற்றும் T.சர்வே எண் 64 சின்னப்பிள்ளை நிலங்கள் (கிழக்கில்)- சாலை மற்றும் T.சர்வே எண் 62 பாஸ்கர் சொத்து (மேற்கில்)- T.சர்வே எண் 98 கந்தசாமி சொத்து.	ரூ.7,30,000/- ரூ.73,000/- ரூ.10,000/-	கடன் கணக்கு எண். SEPONPT0301181 / 700002958701 15.09.2026 அன்றுள்ளபடி வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.16,67,232/- மேலும் 16.09.2026 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் பிற.
	விற்பனை தொடர்பான விவரங்கள் மற்றும் சந்தேகங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டியவர்கள்: அஜித்குமார் 8190005434, பிரவீன்ராஜ் 9655080981, & பிரசாந்த் மொண்டே - 022-62241676			
2.	**கடன்தாரர்** 1. திரு கப்ரமணி R, C/o திரு ரங்கநாதன் **இணை கடன்தாரர்** 2. திருமதி ஆனந்தி S, C/o திரு சுப்ரமணி **இருவரின் முகவரி** 12/1, குண்டூர், கஞ்சநாயக்கன்பட்டிகிராமம், ஓமலூர், தாராபுரம், சேலம், தமிழ்நாடு, 636309	பழைய சர்வே எண் 357/4M பட்டா எண் 2900-இன்படி அடங்கியுள்ள, 1480 சதுர அடி பரப்பளவுள்ள அந்த நிலப்பகுதி, கட்டிடம் மற்றும் பிற பயன்பாட்டு உரிமைகள் மற்றும் வழித்தட உரிமைகளுடன், சேலம் மாவட்டத் தில் உள்ள சேலம் மேற்கு பதிவு மாவட்டம், ஓமலூர் துணைப் பதிவு மாவட்டம், ஓமலூர் தாலுக்கா, அமணி கஞ்சநாயக்கன் பட்டி கிராமத்தில் அமைந்துள்ளது.	ரூ.10,30,000/- ரூ.1,03,000/- ரூ.10,000/-	கடன் கணக்கு எண். SEOMALR0316087 / 700002612998 15.09.2026 அன்றுள்ளபடி வசூலிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ.17,05,939/- மேலும் 16.09.2026 அன்று முதல் மாதாந்திர எதிர்கால வட்டி, கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் பிற.
	விற்பனை தொடர்பான விவரங்கள் மற்றும் சந்தேகங்களுக்குத் தொடர்புகொள்ள வேண்டியவர்கள்: அஜித்குமார் 8190005434, பிரவீன்ராஜ் 9655080981, & பிரசாந்த் மொண்டே - 022-62241676			
	கடன் வழங்கியவரான வங்கிக்கு தெரிந்தவரையில் வில்லங்கங்கள்: எதும் இல்லை			

மின் ஏலத் தேதி & நேரம்: 28.10.2026 நேரம்: காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை

சொத்துக்களை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் - 18.10.2026 முதல் 23.10.2026 வரை - காலை 10.00 மணி முதல் மதியம் 01.00 மணி வரை

EMD உடன் ஆன்லைன் விண்ணப்ப படிவங்களை சமர்ப்பிக்க கடைசி தேதி: 26.10.2026

விருப்பமுள்ள வாங்குபவர்/ஏலதாரர்கள் மூலம் (EMD) மூன்லைப்புத் தொகையினை, தேசியமயமாக்கப்பட்ட அல்லது பட்டியலில் உள்ள ஏதேனும் வங்கியின் NEFT/RTGS/DD மூலமாக "Equitas Small Finance Bank Ltd", கணக்கு எண்.200000807725 மற்றும் IFSC Code- ESFB0001001, Bhaggyam Galleria, New No. 18, Bazulla Road, T. Nagar, Chennai - 600 017 என்ற பெயரில் உள்ள கணக்கில் செலுத்தி 26.10.2026 அல்லது அதற்கு முன்போ சமர்ப்பிக்க வேண்டும்.

விற்பனை பற்றிய விரிவான விதிமுறை மற்றும் நிபந்தனைகளை பின்வரும் வலைத்தளங்களில் காணலாம். https://www.jmfinancialarc.com/Home/RetailAssets & https://www.bankeauctions.com.

தேதி: 10.10.2026
இடம்: மும்பை

ஒப்பம்/அதிகாரபூர்வ அதிகாரி
JM ஃபினான்சியல் அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஸன் கம்பெனி லிமிடெட்

sf சுந்தரம் மியூச்சுவல் — சுந்தரம் பைனான்ஸ் குரூப் —
சுந்தரம் மியூச்சுவல் ஃபண்டின் திட்டத் தகவல் ஆவணம் (SID) மற்றும் முக்கிய தகவல் குறிப்பாணை (KIM) ஆகியவற்றுக்கான அறிவிப்பு மற்றும் இணைப்பு

சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் திட்டங்களின் தயாரிப்பு லேபிளிங் ('ரிஸ்க்-ஓ-மீட்டர்') திருத்தம்

முதலீட்டாளர்கள் / யூனிட் வைத்திருப்பவர்களுக்கு இதன்மூலம் அறிவிக்கப்படுவது என்னவென்றால், மார்ச் 20, 2026 தேதியிட்ட முதன்மைச் சுற்றறிக்கையின் பிரிவு 6.16.1-ஐயும், அதனுடன் சேர்த்துப் படிக்கையில், நவம்பர் 05, 2024 தேதியிட்ட செபி சுற்றறிக்கை எண் SEBI/HO/IMD/PoD1/CIR/P/2024/150-ஐயும் கொண்டு, சுந்தரம் மியூச்சுவல் ஃபண்ட் ("ஃபண்ட்") திட்டங்களின் ரிஸ்க்-ஓ